இன்று

சிந்திப்போம்.... செயல்படுவோம்

"நீ எந்த விதமான உலகத்தை பார்க்க விரும்புகிறாயோ அதுபோலவே நீ மாறு"

தங்கம்	கிராம்	22 கேரட் தங்கம்	24 கேரட் தங்கம்
விலை	1 கிராம்	Rs. 15,050	Rs. 16,418

கற்பக விநாயகா பொறியியல் மற்றும் தொழிநுட்ப கல்லூரில் மேலாண்மை துறை (ம) கணினி துறை ஒன்றிணைந்து தேசிய அளவிலான கருத்தரங்கம்

மதுராந்தகம், மார்ச், 8

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், பட்டாளம் அருகில் உள்ள கற்பக விநாயகா பொறியியல் மற்றும் தொழிநுட்ப கல்லூரில் மேலாண்மை துறைமற்றும் கணினிதுறை ஒன்றிணைந்து தேசிய அளவிலான கருத்தரங்கம் நடைபெற்றது

இவ் விழாவில் கலந்து கொண்ட அனைவரையும் மேலாண்மைத்துறை தலைவர் முனைவர் சாகுல் அமீது வரவேற்றார். கல்லூரி இயக்குனர் முனைவர் மீனாட்சிஅண்ணாமலை தலைமை உரை வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர். பி.காசிநாத பாண்டியன் வாழ்த்துரை வழங்கினார்

மேலும்இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக ஊக்கமளிக்கும் பேச்சாளர் லயன் ஆர். சரவணன் சிறப்புரை வழங்கினார். இதில் சிறப்பு விருந்தினராக பங்குச்சந்தை. காம் நிறுவனர் முத்துராமலிங்கம் கலந்து கொண்டார்

பல்வேறு கல்லூரிகளை சார்ந்த 800 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பல்வேறு போட்டிகளில் பங்கு பெற்றனர். வெற்றி பெற்றவர்களுக்கு ஊக்கத்தொகை, கேடயம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. இறுதியில் கணினிதுறை தலைவர் முனைவர் ஹாஜ்ராபி நன்றி உரை வழங்கினார்

ஸ்ரீ ராம் பொறியியல் கல்லூரியில் சர்வதேச மகளிர் தின விழா கொண்டாட்டம். ஜோஹோ இயக்குநர் ராஜலக்ஷ்மி பங்கேற்பு

வேப்பம்பட்டு, மார்ச், 8,

திருவள்ளூர் மாவட்டம், பெருமாள்பட்டுபகுதியில் அமைந்துள்ள ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியின் மகளிர்மேம்பாட்டுமையம் சார்பில் சர்வதேச மகளிர் தின விழா கல்லூரியின் முதன்மை அரங்கில் சிறப்பாக நடைபெற்றது

பெண்களின் சாதனைகளைபோற்றவும், சமத்துவம் மற்றும் பெண்கள் முன்னேற்றம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. நிகழ்ச்சி காலை 10.00 மணிக்கு இறை வணக்கத்துடன் பாரம்பரிய முறையில் சுத்துவிளக்குஏற்றிநிகழ்ச்சி தொடங்கப்பட்டது

வரவேற்புரை நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தை விளக்கி, பெண்கள் கல்வி மற்றும் தலைமைத்துவத்தில் முன்னேற வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியது. நிகழ்ச்சியின் தலைமை உரையை ஸரீராம் கல்வி அறக்கட்டளையின் அறங்காவலர் எஸ்.கமலி மற்றும் அறங்காவலர் கல்லூரி பார்த்தசாரதி ஆகியோர் வழங்கினர்.

அவர்கள் பெண்கள் சமூக வளர்ச்சியில் வகிக்கும் முக்கிய பங்கு குறித்து எடுத்துரைத்து,மாணவிகள் தன்னம்பிக்கையுடன் தங்கள் இலக்குகளை அடைய வேண்டும் என ஊக்கம் அளித்தனர்

இந்த நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக Zoho Corporation Pvt. Ltd. நிறுவனத்தின் இயக்குநர் ராஜலக்ஷ்மி சீனிவாசன் கலந்து கொண்டார். அவரை கல்லூரி நிர்வாகம் மற்றும் ஆசிரியர்கள் மரியாதையுடன் பாராட்டினர்

அவர் தனது உரையில், தொழில்நுட்ப துறையில் பெண்கள் அதிக வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், தொடர்ந்துபுதியதுறைகளை கற்றுக்கொண்டுமுன்னேற வேண்டும் என்றும் மாணவர்களுக்கு ஊக்கமளித்தார்

கல்லூரி முதல்வர் ரமேஷ்பாபு உள்ளிட்ட நிர்வாகத்தினர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியின் முழு ஏற்பாடுகளையும் முனைவர். இயற்கை பொறியியல் துறைத் தலைவர் டாக்டர் ஜி.சுகன்யா முன்னெடுத்து சிறப்பாக ஒருங்கிணைத்தார்

மாணவிகளின் கலாச்சார நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இறுதியில் நன்றியுரை வழங்கப்பட்டு நிகழ்ச்சி நிறைவுபெற்றது. இந்த நிகழ்வு பெண்கள் முன்னேற்றம், சமத்துவம் மற்றும் மரியாதை ஆகியவற்றைவலியுறுத்தும் வகையில் சிறப்பாக அமைந்தது

ஈரானியர்களை திருப்பி அனுப்ப வேண்டாம் : இலங்கைக்கு அமெரிக்காவின் அதிரடி அறிவிப்பு

சென்னை, மார்ச், 8.

ஈரானிய போர்க்கப்பலான ஐஆர்ஐஎஸ் தேனா மூழ்டிக்கப்பட்டதைத் தொடர்ந்து மீட்கப்பட்ட ஈரானிய மாலுமிகளை திருப்பி அனுப்ப வேண்டாம் என்று அமெரிக்கா இலங்கைக்கு அழுத்தம் கொடுத்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. அமெரிக்க உள் வெளியுறவுத்துறையின் கேபினட்பிரிவுஇந்தகலை வழங்கியுள்ளதாக குறித்த செய்திகளில் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது

இலங்கை, காலேயில் இருந்து சுமார் 19 கடல் மைல் தொலைவில் கடந்த புதன் கிழமை இந்தியப் பெருங்கடலில் ஒரு அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல்ஈரானியஐஆர்ஐஎஸ் தேனா போர்க்கப்பலை மூழ்கடித்தது. இதன்போது பலர் கொல்லப்பட்டதுடன் ஏனையவர்களை இலங்கை கடற்படையினர் மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்தனர். ஈரானிய கப்பலில் இருந்து சிலர் மீட்கப்பட்டனர்

இதனை தொடர்ந்து, விசாழக்கிழமை இலங்கை இரண்டாவது ஈரானிய கப்பலான ஐஆர்ஐஎஸ் பூஷெரிலிருந்து 208 பணியாளர்களை இலங்கை கடல்படையினர் மீட்டனர். ஜனாதிபதி அநுர குமாரதிசாநாயக்க, எந்த நாட்டிற்கும் ஆதரவாக இல்லை, ஆனால்தனது நாட்டிற்கு பாதிக்கப்பட்டவர்களை அழைத்துச் செல்ல மனிதாபிமான பொறுப்பு தமக்கு இருப்பதாகக் கூறினார்

அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் பீட் ஹெக்செத் 'அமைதியான மரணம்" என்று விவரித்த டெனாகப்பலின் டார்பிடோ தாக்குதல், இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அமெரிக்காவின் முதல் நடவடிக்கையாகும். மேலும், ஈரான் மீதான மோதலின் புவியியல் நோக்கம் விரிவடைந்து வருவதற்கான தெளிவான அறிகுறியாகவும் இது பார்க்கப்பட்டது.

இந்நிலையில், கொழும்பில் உள்ள அமெரிக்கதூதரகத்திற்கு பொறுப்பான ஜெய்ன் ஹோவெல், ஈரானில் இருந்துவந்தஇரண்டாவது கப்பலான பூஷெரில் இருந்தவர்களையோ அல்லதுதேனாவில்உயிர் பிழைத்த 32 பேரையோ ஈரானுக்கு திருப்பி அனுப்பக்கூடாது என்று இலங்கைஅரசாங்கத்திற்கு வலியுறுத்தியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன

ஆர்.கே நகரில் ரூ.15 லட்சம் செலவில் 38 வது புதிய நியாய விலை கடை திறப்பு

சென்னை, மார்ச், 8,

சென்னை புதுவண்ணாரப்பேட்டை இளைய தெருவில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.15 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள நியாய விலை கடை மற்றும் ஏ.இ.கோயில் தெருவில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.15 லட்சம் மதிப்பீட்டில். புதியதாக நியாய விலை கடை கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டும் விழா நடைபெற்றது

இந்த நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் கலந்து கொண்டு பூமி பூஜை செய்து அடிக்கல் நாட்டி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து புதியதாக கட்டப்பட்ட பல்நோக்கு கட்டிடத்தில் நியாய விலை கடையை ஜே.ஜே.எபினேசர் திறந்து வைத்து மக்களுக்கு உணவு பொருட்களை வழங்கினார். நிகழ்ச்சியில் அப்பகுதி பெண்கள் பங்கேற்று பூஜை செய்து புதிய கடைக்கு அடிக்கல் நாட்டினர் பின்னர் அனைவருக்கும் இனிப்புகளை வழங்கி எம்எல்ஏ எபினேசர் கொண்டாடினார்

நிகழ்ச்சியில் சென்னை மாநகராட்சி 4வதுமண்டல குழு தலைவர் நேதாஜி பு.கணேசன், மாமன்ற உறுப்பினர் குமாரி, அவை தலைவர் அனிபா, வட்டச் செயலாளர்கள் சோதன்,கன்,கதிரேசன், நாகராஜ், கஜேந்திரன், குமார், உள்ளிட்ட ஏராளமான கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

தென்காசி மாவட்ட- புளியங்குடியில் எஸ் வீராசாமி செட்டியார் மாலிடெக்னிக் கல்லூரி மாணவிகளின் தொழில்நுட்ப திட்டத்தில் அபார சாதனை



தென்காசி , மார்ச். 8-

தொழில்நுட்ப திட்டத்தில்மாநில அளவில் நடைபெற்றதொழில்நுட்ப படைப்புகளை ஆய்வு செய்வதன் நிகழ்ச்சி வீராசாமி செட்டியார் பொறியியல் கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்குதொழில் நுட்பத் திட்டங்களை தேர்வு செய்வதற்காக கொற்றவையின் தலைமை நிர்வாக அதிகாரிகாருண்யா கணபதி அவர்கள் தேர்வு செய்ததில் வீராசாமி செட்டியாரபாலிடெக்னிக் கல்லூரியின் மாணவி ஆடிலாக்ஷ்மிபொறியலில் மூன்றாம் ஆண்டு பயின்று வரும் அவர் தொழில்நுட்ப திட்டங்கள் உருவாக்குவதில் இரண்டாம் பரிசு பெற்று சாதனை படைத்துள்ளார் இதற்காக வீராசாமி செட்டியார் கல்விக் குழுமங்களின் தலைவர் டாக்டர் வி.முருகையா, செயல் இயக்குனர் விக்னேஷ் வீராசாமி, முதல்வர் இச்கி முத்து, கல்வி குழுமங்களின் வளர்ச்சி இயக்குனர் டாக்டர் ஜமால் முகமது ஜுபேர், கல்விக் குழுமங்களின் மேலாளர் தங்கப்பன் பிள்ளை, துறைத்தலைவர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் அனைவரும் பாராட்டுகளை தெரிவித்தனர்.

அரசினர் மேல்நிலை பள்ளியில் ரூ.16.50 லட்சத்தில் கட்டி முடிக்கப்பட்ட கலையரங்கத்தை சரிகந்த் செந்தில் எம்பி திறந்து வைத்தார்

ஊத்துக்கோட்டை, மார்ச், 8,

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், வெங்கல் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் சுமார் ஆயிரம் மாணவ - மாணவியர் படித்து வருகின்றனர். இப்பள்ளிக்கு கலையரங்கம் வசதி செய்து தர வேண்டும் என பள்ளி மாணவர்கள் மற்றும் கிராம மக்கள் சார்பாக எல்லாபுரம் ஒன்றிய முன்னாள் உறுப்பினர் திருமலை சிவசங்கர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சரிகாந்த் செந்தில் கலந்து கொண்டு கலையரங்கத்தை திறந்து வைத்து கல்வி ஒன்றே மனிதனை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லும். அவ்வாறு சிறப்பு மிக்க இந்த கல்விச் செல்வத்தை ஒழுக்கத்துடன் பெற்று வாழ்க்கையில் உயர்ந்த நிலைக்கு செல்ல வேண்டும் என மாணவர்களுக்குஎடுத்துக் கூறி சிறப்புரையாற்றி பேசினார்.

இந்நிகழ்ச்சியில், திருவள்ளூர் தெற்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி நிர்வாகிகள், எல்லாபுரம் தெற்கு வட்டாரநிர்வாகிகள்என ஆர்.ஆர்.சாந்தகுமார், காங்கை குமார், ஆர். எம்.தாஸ், லயன் ரமேஷ், இமாலயாக்கான், மாத்தூர் ரங்கநாயகி, தேவேந்திரன், டாக்டர் வெங்கடேசன், சதா பாஸ்கர், அன்பழகன், சிவக்குமார்.பிரேம்ஆனந்த் சோழவரம் வேல்முருகன், வேப்பம்பட்டு ரவிக்குமார், திருநின்றவூர் குமார் உள்ளிட்ட மாநில, மாவட்ட, வட்டார நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை பள்ளியின் உதவி தலைமை ஆசிரியர் ஆர்.பரமானந்தம் தொகுத்து வழங்கி அனைவருக்கும் நன்றி கூறினார்

கற்பக விநாயகா பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரி மாதரே 2026

மதுராந்தகம், மார்ச்.8

செங்கல்பட்டு மாவட்டத்தில் அமைந்துள்ள கற்பக விநாயகா பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் சாதனைப் பெண்களை கௌரவிக்கும் வகையில் மாதரே டி.26 விருது வழங்கும் விழா ரகுபதி சரோஜா அரங்கத்தில் மிகுந்த உற்சாகத்துடனும் மற்றும் சிறப்பாகவும் நடைபெற்றது

பெண்களின் நிறமை, தலைமைத்துவம், கல்வி முன்னேற்றம் மற்றும் சமூக பங்களிப்பை கொண்டாடும் நோக்கில் இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்விழாவில் கல்லூரி இயக்குனர், முதல்வர், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் பெருமளவில் கலந்து கொண்டனர்

நிகழ்ச்சியின் தொடக்கமாக தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டு, குத்து விளக்கேற்றி விழா துவங்கப்பட்டது. இந்த நிகழ்வின் முக்கிய குறிக்கோள் பெண் சாதனையாளர்களை அடையாளம் கண்டு அந்தந்த துறைகளில் முன்மாதிரியாக இருப்பவர்கள் மற்றும் இளம்திறமையாளர்களை ஊக்குவிப்பதோடு ஒட்டுமொத்த சமூகத்திற்கும் உத்வேகமாக இருக்கும் தகுதியான மற்றும் திறமையான பெண்களை கௌரவிப்பது ஆகும். பல்வேறு துடைகளை தாண்டி இலக்கை அடைந்த சாதனையாளர்களுக்கு இவ்விருதுவழங்கப்பட்டு வருகின்றது

மேலும் ஏ.எஸ்.குமாரி, தமிழ்நாடு மாநில மகளிர் அணியத்தின் தலைவர், சிறப்பு விருந்தினராக

வருகைபுரிந்து விழாவிற்கு தலைமை ஏற்றார். சாதனையாளர்களை வாழ்த்தினர். மருத்துவர் அண்ணாமலை தகுதி இயக்குனர் விழாவிற்கு முன்னிலை வகித்தார்

முனைவர் மீனாட்சி அண்ணாமலை இயக்குனர் கற்பக விநாயகா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி சின்ன கொளம்பாக்கம் பட்டாளம் விழாவிற்கு தலைமை தாங்கினார். கற்பக விநாயகா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் முனைவர் பி.காசிநாத பாண்டியன் மற்றும் டீன் சுப்பாராஜ் விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்

இந்நிகழ்வில் மருத்துவம், பொறியியல், விண்வெளி, அரசியல், தொழில் முனைவோர் மற்றும் பல்வேறு துறை சார்ந்த பெண் வல்லுனர்களுக்கு சாதனை பெண்கள் விருது வழங்கப்பட்டது

திரைப்பட நடிகை அபர்ணா பால முரளி சின்னத்திரை நடிகை நட்சத்திர விளையாட்டு வீரர்ங்கனை ஆரத்தி அருண் பாடகி பத்மலதா ராமனார் மற்றும் பலருக்கு விருதுகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாக திரை பிரபலங்கள் சமூக செயற்பாட்டாளர்கள் அரியல் பெண் ஆளுமைகள் பொன்நோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

"மாதரே 2026" நிகழ்ச்சி பெண்களின் ஆற்றல், அர்ப்பணிப்பு மற்றும் தலைமைத் திறனை வெளிப்படுத்தும் ஒரு சிறந்த மேடையாக அமைந்தது நிகழ்ச்சியின் இறுதியில் நன்றியுரை வழங்கப்பட்டு விழா இனிதே நிறைவுற்றது